## மின்வலு அமைச்சு

# பதவி வெற்றிடம் பற்றிய அறிவித்தல்

## பணிப்பாளர் நாயக/பிநிஅ பதவி

## இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை

புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தியிலும் மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டிலும் ஈடுபட்டுள்ள உயர் தேசிய நிறுவனமான எமது அதிகாரசபையுடன் இணையுங்கள். காலநிலை மாற்றத்தின் பேரழிவுகளிலிருந்து புவியை காப்பாற்றுவதற்கான எமது போராட்டத்தில் சக்தி பரிவர்த்தனையை ஊக்குவிக்கின்ற ஒரு தொழில் நிபுணர் குழுவை வழிநடத்த வாருங்கள்.

இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயக பதவிக்கு, இலங்கையின் தகுதிவாய்ந்த பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அரசாங்கம் அங்கீகரித்த சம்பள அளவுத்திட்டங்களில் நியமனங்கள் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

**பின்னணி**

2007 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி பயணத்தை ஆரம்பித்த இந்த இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை, இலங்கையின் சக்தி துறையில் ஆழமான மற்றும் நீண்ட ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நிலைபெறுதகு சக்தியின் இரட்டை நோக்கங்களில் தொழிற்படும் இது, புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தியின் பரந்த நோக்கத்தை உள்ளடக்கிய அதன் பல நிகழ்ச்சி திட்டங்களின் ஊடாக உயிரணுத்திணிவு சக்தி, நீர்வலு, சூரிய சக்தி, காற்று சக்தி என்பவற்றின் பயன்படுத்தப்படாத இயற்கை சக்தி வளங்களை பயனுள்ள வணிக பயன்பாட்டிற்கு கொண்டுவர அதேபோல் வணிகம், கைத்தொழில், வதிவிடம் மற்றும் போக்குவரத்து ஆகிய துறைகளில் உள்ள எல்லா பெறுமான சங்கிலி முறைமைகளிலும் சக்தியின் வினைத்திறனை மேம்படுத்தவும் தலைமை வகித்துள்ளது. எதிர்பார்ப்புகளையும் தாண்டி, 2015 ஆம் ஆண்டில், இலக்கு திகதிக்கு ஒரு வருடம் முன்னதாக, இது புதுப்பிக்கத்தகு புதிய சக்தி மூலங்களிலிருந்து 10% சக்தியை வழங்குவதற்கும், 2024 ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தகு சக்தி மூலங்களிலிருந்து 55% மின்சார விநியோக இலக்கை அடைவதற்கும் பங்களித்துள்ளது. சூரியபல சங்கிரமய என்றழைக்கப்படும் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக ஆயிரக்கணக்கான மின்சார நுகர்வோரை சக்தி விநியோகத்தர்களாக அணிதிரட்டும் சக்தி துறையில் மிக முக்கியமான நிகழ்ச்சித்திட்டத்தை அதிகாரசபை தேர்ந்தெடுத்து செயற்படுத்தியது. சக்தி வினைத்திறன் முன்னெடுப்பு செயற்பாட்டில், அதிகாரசபை இன்னும் பல உபகரணங்களை சக்தி முத்திரையிடும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொண்டு வருகின்ற கருமபணியை தொடர்ந்தும் மேற்கொண்டு வரும் அதேவேளை அனைத்து முக்கிய துறைகளையும் சக்தி அளவுகோல் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் கொண்டுவருவதற்கான முன்னேற்ற பயணத்திலும் சென்று கொண்டிருக்கின்றது. மேலும் சக்தி வினைத்திறன் கட்டிட குறியீட்டை அமுல்படுத்துவதிலும் முன்முரமாகவுள்ளது.

அதிகாரசபை சக்தி தரவு, தகவல் மற்றும் அறிவு என்பவற்றின் முக்கிய வளமாக விளங்குகின்ற பாலர்பாடசாலை பிள்ளைகள் முதல் முதுகலை ஆராய்ச்சியாளர்கள் வரையான பிரஜைகளை, இலங்கையை சக்தி பாதுகாப்புடைய ஓர் எதிர்காலத்தை நோக்கி கொண்டுசெல்லும் முயற்சியில் ஈடுபடுத்தியுள்ளது. தேசிய சக்தி கணக்காளரர் என்ற ரீதியில், இந்த அதிகாரசபை ஒரு வருடாந்த அடிப்படையில் "இலங்கை சக்தி சமநிலை" என்றழைக்கப்படுகின்ற ஒரு முதன்மை ஆவணத்தை தொடர்ந்து வெளியிட்டு வருகின்றது.

2050 ஆம் ஆண்டில் கார்பன் சமநிலை இலக்கை அடைவதற்கான பயணத்தில் அதிகாரசபையால் அண்ணளவாக இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடுகளை திரட்ட முடிந்துள்ளது. இலங்கை சக்தி பரிவர்த்தனையின் தீர்க்கமான கட்டத்தில் கால்பதிக்கும்போது, அதிகாரசபை வகிக்கும் வகிபங்கின் முக்கியத்துவம் வளர்ச்சிக்கு பங்களிக்கும்.

**வகிபங்கு**

அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக விளங்குகின்ற பணிப்பாளர் நாயகம் நிலைபெறு சக்தி துறையில் அதிகாரப்பூர்வ சாதனைகளில் சிறந்து விளங்குவதற்காக அதன் அனைத்து ஊழியர்களுக்கும் தலைமைத்துவத்தையும் ஊக்கத்தையும் வழங்குவதன் மூலம் நிர்வாக மற்றும் நிதிசார் செயற்பாடுகள் அடங்கலாக அதிகாரசபையின் அனைத்து விவகாரங்களுக்கும் பொறுப்புடையவராவார். கொள்கை விடயங்களில் முகாமை சபைக்கு ஆலோசனை வழங்க அவர் எதிர்பார்க்கப்படுகின்றார். மேலும் அதிகாரசபையின் செயற்பாடுகளுக்கு தேவையான நிதியையும் மற்றும் வளங்களையும் பெறுவதற்கும் அவர் பொறுப்புடையவராவார். தேவைப்படும்போது நிரல் அமைச்சுடனும் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுடனும் தொடர்பு கொள்ளவும் மற்றும் ஒருங்கிணைக்கவும் அவர் ஒப்பந்த புள்ளியாகவும் காணப்படுவார். நாட்டின் நிலைபெறுதகு சக்தி இலக்குகளை அடைய நிகழ்ச்சித்திட்டங்களை தேர்ந்தெடுத்தல், செயற்பாடுகளை மேற்கொள்ளல், அதிகாரங்களை பிரயோகித்தல் சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்துவதில் பொறுப்புகளை ஏற்றல் என்பன தொடர்பான மூலோபாய முடிவுகளை எடுப்பதற்கும் அவர் பொறுப்புடையவராவார். முகாமைத்துவ சபையின் பொதுவான வழிகாட்டலிலும் மற்றும் கட்டுப்பாட்டிலிலும் தொழிற்படும் பணிப்பாளர் நாயகம் சட்டத்தினால் உரித்தளிக்கப்பட்டுள்ள ஆணையை முழுமையாக செயற்படுத்தவும் சட்டத்தில் காணப்படுகின்ற பொருத்தமான ஏற்பாடுகள் ஊடாக அவருக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள குறித்த பொறுப்புகளை நிறைவேற்றவும் எதிர்பார்க்கப்படுகின்றார்.

**பணிப்பாளர் நாயக பதவிற்கு ஆட்சேர்த்துக்கொள்ளல்**
**தகைமைகள்:**

***(கீழே 1 அல்லது 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள்)***

**வெளிவாரி**

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட மின்சாரம்/ இயந்திரவியல் / செயன்முறை / உற்பத்தி அல்லது சக்தி துறையில் பொறியியல் இளங்கலை பட்டத்தை பெற்றிருத்தல் அல்லது இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் இணை உறுப்பினர் ஒருவராக இருத்தல்.

   **அத்துடன்**

   இலங்கை பொறியாளர்கள் நிறுவகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்பின் குழு உறுப்பினராக (பட்டய) இருத்தல் அல்லது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் முதுகலை பட்டத்தை பெற்றிருத்தல்.

   **அத்துடன்**

   முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 20 ஆண்டு கால அனுபவத்தை பெற்றிருத்தல். அந்த அனுபவ காலத்தில் 05 ஆண்டு கால அனுபவம் முதல் பட்டம் பெற்றதன் பின்னர் ஒரு கூட்டுத்தாபனத்தில், சபையில் அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனத்தில் நிரூபிக்கப்பட்ட பதிவுகளுடன் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல்.

2. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட மின்சாரம்/ இயந்திரவியல்/செயன்முறை/உற்பத்தி அல்லது சக்தி தொடர்பான துறையில் பொறியியல் இளங்கலை பட்டத்தை பெற்றிருத்தல்.

   **அத்துடன்**

   உரிய துறையில் PhD பட்டத்தை பெற்றிருத்தல்.

   **அத்துடன்**

   முதல் பட்டத்தை பெற்றதன் பின்னர், ஒரு கூட்டுத்தாபனத்தில், சபையில், உயர் கல்வி நிறுவனத்தில் அல்லது ஒரு புகழ்பெற்ற வணிக நிறுவனத்தில் நிரூபிக்கப்பட்ட பதிவுகள், முகாமைத்துவ அனுபவம் ஆகியவற்றுடன் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 05 ஆண்டுகள் அனுபவம் இருத்தல்.

**உள்வாரி**

மேற்கூறிய வெளிவாரி கல்வி தகைமைகளுடன் ஒரு பிரதி பணிப்பாளர் நாயகமாக (HM 2-1) இரண்டு (02) ஆண்டு கால அனுபவம் இருத்தல்.

**வயதெல்லை**

35 வயதுக்கு குறையாமலும் மற்றும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கும் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்களில்/ சபைகளில்/ அரச துறையில் உள்ள ஊழியர்களுக்கும் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**சம்பளமும் கொடுப்பனவும்**

இந்த பதவிற்கு ஏற்புடைய சம்பள அளவுத்திட்டம் கீழே தரப்பட்டுள்ளது:

சம்பள அளவுத்திட்டம்: HM 2-3 - ரூ.173,000- 12 ஒ 4,850 - ரூ. 231,200

(01/2025 ஆம் இலக்க DMS சுற்றறிக்கையின் பிரகாரம்: 2026.01.01 முதல் செலுத்தப்படும் ரூ.150,325 தொகை மற்றும் 2027.01.01 முதல் செலுத்தப்படும் ரூ.173,000 தொகை). எனினும் முகாமைத்துவ சபையுடன் கலந்தாலோசித்த பின்னர் இந்த பதவிக்கு பொருத்தமான ஊதியத்தை அமைச்சர் தீர்மானிக்கலாம்.

**ஏனைய கொடுப்பனவுகள்:**

- வாழ்க்கை செலவு கொடுப்பனவு - ரூ.17,800
- தொழில்சார் கொடுப்பனவு - ரூ.25,000
- கையடக்க தொலைபேசி கொடுப்பனவு - ரூ.4,250
- எரிபொருள் கொடுப்பனவு : அந்தந்த மாதத்தின் 01 ஆம் நாளில் நிலவுகின்ற எரிபொருள் விலையின் அடிப்படையில் கணக்கிடப்படுகின்ற மாதத்திற்கு 145 லீற்றர் எரிபொருளுக்கு சமமான தொகை.
- வாகனத்திற்கான கொடுப்பனவு : பொருத்தமானவாறு நிறுவனத்தால் பராமரிக்கப்படும் வாகனம் அல்லது மாதாந்த கொடுப்பனவு ரூ. 50,000.

**விண்ணப்பிக்கும் முறை:**

உறவினர்கள் அல்லாத இரண்டு பரிந்துரையாளர்களின் பெயர்களையும், முகவரிகளையும் மற்றும் தொலைபேசி இலக்கங்களையும் குறிப்பிடுகின்றதும், தகைமைகளையும் உள்ளடக்கியதுமான விண்ணப்பங்கள், அனைத்து உரிய சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதிகளுடன், பணிப்பாளர் நாயகம், இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை, இலக்கம் 80, ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு 2026 ஜனவரி 23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவு தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் பதவி கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் எழுதப்படுதல் வேண்டும்.

அரசாங்க கூட்டுத்தாபனங்களில்/நியதிச்சட்ட சபைகளில்/அரச துறை நிறுவனங்களில் உள்ள ஊழியர்களின் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும் எனில், அந்தந்த நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

**தலைவர்**
**இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை**
**இலக்கம் 80, ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்தை**
**கொழும்பு 07.**
**2026.01.05**

**நிலைபெறுதகு சக்தி பாதுகாப்புடைய ஓர் இலங்கை**